O Lord Who Reigns in Unyielding Might

வல்லமையால் அரசாளும் கர்த்தரே

66 சங்கீதம்

வல்லமையால் அரசாளும் கர்த்தரே
கடலை உலர்ந்த தரையாக மாற்றினீர்
பயங்கரமான கிரியையுடைய தேவனே
யோர்தானை கால்நடையாய் கடக்கச் செய்தீர்

தேவனுக்கு இன்பமாக பாடுங்கள் - அவர்
நாமத்தின் மகத்துவத்தை கொண்டாடுங்கள்
பூமியின் மீதெங்கும் பணிந்துக்கொண்டு
கர்த்தரைத் துதித்துப் பாடுங்கள் (வல்லமையால்)

தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள்
துதியின் சத்தத்தை அவருக்கு கேட்கப்பண்ணுங்கள்
தேவனுடைய செய்கைகளைப் பாருங்கள்
அவரையே துதித்துப் போற்றுங்கள் (வல்லமையால்)

தேவனுக்கு பயந்து நடுங்குங்கள்
அக்கிரமக்காரனுக்கு தேவன் செவிகொடார்
நம் ஆத்துமாவுக்கு கர்த்தர் செய்ததை சொல்லுங்கள்
தமது கிருபையை நம்மை விட்டு விலக்காதிருப்பார்
(வல்லமையால்)

நம்முடைய கால்களை நேராக்குகிறார்
நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்
வெள்ளியைப்போல நம்மை புடமிடுகிறார்
கிருபைத் தரும் தேவனுக்கு ஸ்தோத்திர பலியிடு (வல்லமையால்)

நமது தலையின் மேல் மனுஷரை ஏறிப்போகப்பண்ணினார்
தீயையும் தண்ணீரையும் கடந்துவரச் செய்தார்
செழிப்பான தேசத்திற்கு நம்மைக் கொண்டுவந்தார்
நம் பொருத்தனைகளைச் செலுத்தி அவரைத் துதித்துப்பாடுவோம்
(வல்லமையால்)


O Lord
Who Reigns
Unyielding in
Might
Onye Dioa